# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் – 02.07.2025</u>**

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## <u>வழக்கு எண். CP 2718/SCIC/2022</u>

திரு. கே.அன்பழகன் த/பெ.குழந்தைவேல் மேல்முறையீட்டாளர்
207/1, இந்திரா நகர்
அய்யம்பெருமாம்பட்டி,
ஹவுசிங்போர்டு பின்புறம்
பெரியகொல்லபட்டி, சேலம்-636 008

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி செயற்பொறியாளர்
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்
சி.எம்.டி.எ. வளாகம்
கோயம்பேடு, சென்னை-600 107 …. பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் விசாரணை ஏற்கெனவே 23/01/2025 அன்று ஆணையத்தால் நடத்தப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> ***ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில் இதே பொருண்மை கொண்ட வழக்கினை SA 21222/SCIC/2022, 26/04/2023 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பொது தகவல் அலுவலரை, மனுதாரரின் மனுமீது எடுத்த நடவடிக்கை குறித்த அறிக்கை மற்றும் மனுதாரருக்கு ரூ.25,000/- (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டில்) இழப்பீடு வழங்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.***

*மேற்குறிப்பிட்ட ஆணை தனக்கு கிடைக்கப் பெறவில்லை என மனுதாரர் தெரிவித்தார். அவ்வாணை இன்று மனுதாரரிடம் வழங்கப்பட்டது. ஆணையத்தின் உத்தரவை பொது தகவல் அலுவலர் இதுநாள் வரை நிறைவேற்றவில்லை என்பதும் தெரிய வருகிறது.*

*இப்புகார் மனுவில், மனுதாரர் கோரியுள்ள தகவல்களைப் பொறுத்த மட்டில் 01/07/2022 தேதியிட்ட கடிதத்துடன் 27/06/2022 தேதியிட்ட தகவல், அதாவது தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) அவர்களிடம் விவரங்கள் கோரியுள்ளதாகவும், அதன் பின்னர் ஆட்சேபணை இல்லா சான்றிதழ் வழங்குவது குறித்து முடிவு செய்யப்படும் என்ற தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். பின்னர், 13/09/2022 தேதியிட்டு தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) தனது அறிக்கையை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பியதாகவும், அதன் பின்னர் 11/01/2023 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல் அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார். அதற்கு, அந்த தகவலும் தனக்கு கிடைக்கப் பெறவில்லை என்று மனுதாரர் தெரிவித்தார். இன்று அதன் நகலும் மனுதாரரிடம் வழங்கப்பட்டது.*

*இன்றைய விசாரணையின்போது, பொது தகவல் அலுவலர் G.O. 136, Dated 10/10/2023-நகலை ஆணையத்தின் முன்பாக சமர்ப்பித்தார் - அந்த அரசு ஆணை நிலம் கையகப்படுத்தலில் பொது மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள குழு குறித்ததாகும். அதேபோன்று மற்றொரு G.O.179, Dated 04/10/2024 - நகலை ஆணையத்தின் முன்பாக சமர்ப்பித்தார். அந்த அரசாணை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் நில எடுப்பு மற்றும் பிற இனங்கள் தொடர்பான பொது மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக அமைக்கப்பட்ட சிறப்புக்குழுவின் பரிந்துரைகள் - மதுரை மற்றும் சேலம் மண்டலங்களில் நில எடுப்பு நடவடிக்கைகளைத் திரும்பப் பெறுதல் தொடர்புடையதாகும்.*

*மேலும் பொது தகவல் அலுவலர் தெரிவிக்கையில், மனுதாரரின் நிலம் மேற்குறிப்பிட்ட வகைப்படுத்தலில் சேராது என்றும் ஏற்கெனவே இழப்பீடு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ள வகையினைச் சார்ந்தது, அதாவது வீட்டுவசதி வாரியம் நிலத்திற்கான தொகையை வழங்க வேண்டியுள்ளது என்றார். அதற்கான நடவடிக்கையை அரசு எடுத்து வருவதாகவும், அதற்கு ஆறு மாத காலமாகும் என்றும் தெரிவித்தார். பொது தகவல் அலுவலர், மனுதாரர் சம்பந்தமான கோரிக்கை குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்போது அது குறித்த விவரங்களை மனுதாரருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.*

*மேலே குறிப்பிட்டுள்ளவாறு 26/04/2023 தேதியிட்ட ஆணையின்படியான இழப்பீடு இது நாள் வரை வழங்கப்படவில்லை என்பதும் மேலும் அந்த ஆணைக்கு எதிராக எவ்வித மேல்முறையீடும் செய்யப்படவில்லை என்பதும் தெரியவருகிறது. இதனை ஆணையம் முற்றிலுமாக ஏற்கவில்லை. எனவே, பொது அதிகார அமைப்பு, மனுதாரருக்கு சேர வேண்டிய முழுத் தொகையையும் இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு வார காலத்திற்குள் வழங்கப்பட வேண்டுமென்றும் அதன் பின்னர் தற்போதைய பொது தகவல் அலுவலர், அது குறித்த நிறைவேற்றுகை அறிக்கை, மனுதாரருக்கு தொகை வழங்கப்பட்ட பற்றுச் சீட்டின் நகல் ஆகியவற்றை 10/02/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.*

*மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை அவர்கள், 26/04/2023 அன்று ஆணையத்தின் விசாரணையில் பங்கேற்ற பொது தகவல் அலுவலர் திரு C.ரவிச்சந்திரன், தனி வட்டாட்சியர் மீது, ஆணையம் பிறப்பித்த உத்தரவான மனுதாரருக்கு ரூ.25,000/- (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) இழப்பீடு வழங்க வேண்டும் என்ற ஆணையினை நிறைவேற்றாததற்கு அவர் மீது உரிய துறை ரீதியிலான ஒழுங்கு நடவடிக்கையினை எடுத்து அதுகுறித்த அறிக்கையினை ஒரு மாதத்திற்குள் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. இத்துடன் 26/04/2023 தேதியிட்ட ஆணையம் பிறப்பித்த ஆணை நகல், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை அவர்களுக்கு உரிய நடவடிக்கைக்காக இணைத்து அனுப்பப்படுகிறது.*

*மேற்குறிப்பிட்டவாறு, 10/02/2025 தேதிய விசாரணைக்கு பொது அதிகார அமைப்பின் சார்பில் யாரொருவரும் ஆஜராகவில்லை. எனவே, இன்றைய ஆணையத்தின் விசாரணைக்கு ஆஜராகத் தவறியதற்காகவும், மனுதாரருக்கு ரூ.25,000/- (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) இழப்பீடு வழங்கியதற்கான இரசீதினை சமர்ப்பிக்காமைக்கும் திரு.V.சூரியமூர்த்தி, உதவி செயற்பொறியாளர்/பொது தகவல் அலுவலர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை அவர்கள் மீது பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை 12/03/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.*

**மேற்குறிப்பிட்டவாறு இன்று (12/03/2025) திரு.V.சூரியமூர்த்தி, உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை அவர்கள் ஆஜராகி, ஆணையம் உத்தரவிட்டவாறு இழப்பீடு வழங்க வேண்டியது குறித்து, W.P.No.8372/2025. Dated 07/03/2025 என்ற எண்ணில் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அது தொடர்பான அறிக்கையினை ஆணையத்தின் முன்பாக சமர்ப்பித்தார். எனவே, இத்துடன் இந்தப் புகார் மனு முற்றாக்கப்படுகிறது.**

**மேலும், ஆணையம் உத்தரவிட்டவாறு 10/02/2025 அன்று ஆஜராகததற்கான காரண விளக்கத்தையும் ஆணையத்தின் முன்பாக சமர்ப்பித்தார்.**

**மேற்குறிப்பிட்டவாறு திரு.வீ.சூரியமூர்த்தி, பொதுத் தகவல் அலுவலர் (பொ)/ உதவி செயற்பொறியாளர், அவர்களின் 11/03/2025 தேதியிட்ட காரணம் விளக்கக் கேட்பு குறிப்பாணைக்கான விளக்கம் ஆணையத்தால் பெறப்பட்டது. அக்காரண விளக்கத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

"ஆணையத்திலிருந்து அனுப்பப்பட்ட தமிழ்நாடு தகவல் ஆணையம், ஆணைய வழக்கு எண்.CP 2718/SCIC/2022, ஆணை நாள் 23/01/2025 கடிதமானது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு 12/02/2025 அன்று கிடைக்கப் பெற்றது. அதாவது 10/02/2025 அன்று நேரடியாக ஆஜராக வேண்டிய தகவல் வாரியத்திற்கு 12/02/2025 அன்றுதான் தெரிய வருகிறது. அதனால் பொதுத் தகவல் அலுவலர், வாரிய தலைமையகம் அவர்கள் நேரடியாக ஆஜராக முடியாத சூழ்நிலை ஏற்பட்டது என்பதை ஆணையத்திற்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இந்நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் வழக்கு எண்.21222/SCIC/2022, 26/04/2023 நாளிட்ட ஆணையத்தின் ஆணையின் மீது வாரியத்தின் சார்பில் வாரிய சட்ட ஆலோசகர் திரு.சி.கலைச்செல்வன் மூலம் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் 07/03/2025 நாளன்று மேல்முறையீடு செய்யப்பட்டு, நீதிப்பேராணை எண்.WP/8372/2025 பெறப்பட்டது என்பதை ஆணையத்தின் முன்பாக மேற்காணும் தகவல்கள் சமர்ப்பிக்கப்படுகிறது."

**மேற்சொன்ன காரணம் விளக்கக் கேட்பு குறிப்பாணைக்கான விளக்கத்தினை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது. மனுதாரருக்கு இழப்பீடு வழங்க உத்தரவிட்டது தொடர்பாக, பொது அதிகார அமைப்பு, சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது. எனவே, இப்புகார் மனு மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ீதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**
**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## வழக்கு எண். CP 2718/SCIC/2022

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

திரு.V.சூரியமூர்த்தி
பொதுத் தகவல் அலுவலர்/
உதவி செயற்பொறியாளர்
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்
சி.எம்.டி.ஏ. வளாகம், கோயம்பேடு, சென்னை-600 107

2.மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
சி.எம்.டி.ஏ. வளாகம், E மற்றும் C மார்க்கெட் சாலை
கோயம்பேடு, சென்னை-600 107

**மேல்முறையீட்டாளர்**

திரு. கே.அன்பழகன் த/பெ.குழந்தைவேல்
207/1, இந்திரா நகர், அய்யம்பெருமாம்பட்டி,
ஹவுசிங்போர்டு பின்புறம்,
பெரியகொல்லபட்டி, சேலம்-636 008

நகல்
பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
சென்னை-600 035

RG/PC